செய்தி வெளியீடு எண். 07-2017 நாள்: 03.10.2017

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தப்பணி-2018, வரைவு வாக்காளர் பட்டியலை, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.10.2017) வெளியிட்டார்.

*****

விழுப்புரம் மாவட்டத்தில் 01.01.2018 தேதியை தகுதி ஏற்பு நாளாக கொண்டு அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தப்பணி 03.10.2017 முதல் 31.10.2017 வரை பணி மேற்கொள்ளுதல் மற்றும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் குறித்தும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளிடையே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் 03.10.2017 அன்று காலை 10.00 மணிக்கு கூட்டம் நடத்தினார். இக்கூட்டத்தில் கட்சி பிரதிநிகள் முன்பாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் 03.10.2017 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அ.அனுசுயாதேவி, தனி வட்டாட்சியர் (தேர்தல்) திரு.வீ.வெற்றிவேல் ஆகியோர் உடனிருந்தனர். மேற்படி தேதியில் அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கும் வெளியிட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் பின்வருமாறு வாக்காளர்கள் உள்ளனர் என்றும் வாக்காளர் பட்டியல் சுருக்க திருத்த பணிகள் குறித்து பின்வருமாறு தகவலை தெரிவித்துள்ளார்.

| எண்/சட்டமன்ற தொகுதி | ஆண் | பெண் | இதரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 70. செஞ்சி | 126296 | 128704 | 32 | 255032 |
| 71. மைலம் | 107540 | 108036 | 17 | 215593 |
| 72. திண்டிவனம் (தனி) | 111058 | 114487 | 6 | 225551 |
| 73. வானூர் (தனி) | 110693 | 113979 | 18 | 224690 |
| 74. விழுப்புரம் | 123693 | 128584 | 54 | 252331 |
| 75. விக்கிரவாண்டி | 111958 | 112872 | 25 | 224855 |
| 76. திருக்கோவிலூர் | 123894 | 122178 | 43 | 246115 |
| 77. உளுந்தூர்பேட்டை | 141187 | 137837 | 43 | 279067 |
| 78. ரிஷிவந்தியம் | 127758 | 123091 | 57 | 250906 |
| 79. சங்கராபுரம் | 127544 | 127450 | 40 | 255034 |
| 80. கள்ளக்குறிச்சி (தனி) | 135380 | 135618 | 52 | 271050 |
| மொத்தம் | 1347001 | 1352836 | 387 | 2700224 |

**வாக்காளர் பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இடங்கள் விபரம்.**

1. மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம்.
2. வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் /சார் ஆட்சியர் அலுவலகங்கள்
3. உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள்
4. உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் நகராட்சி அலுவலகங்கள்
5. நியமன வாக்குசாவடி அமைவிடங்கள்
6. பதிவு செய்யப்பட்ட நகரபகுதி குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் கிராம சபைகளில் 07.10.2017 மற்றும் 21.10.2017 அன்று வாக்காளர் பட்டியலின் உரிய பாகத்தினை பார்வைக்கு வைத்து பெயர் வாசிக்கப்படும். வாக்காளர்கள் அவர்களது பெயரினை சரிபார்த்து கொள்ளுமாறு அறிவுறுத்துதல்.

| வ.எண் | பணிகள் விபரம் | பணிகால அளவு |
|---|---|---|
| 1. | வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | 03.10.2017 (செவ்வாய்கிழமை) |
| 2. | வாக்காளர்களிடம் கோரிக்கை/ஆட்சேபனை மனுக்கள் பெறுதல் | 03.10.2017 முதல் 31.10.2017 வரை |
| 3. | கிராமசபா கூட்டம் (ஊரகபகுதி) உள்ளூர் அமைப்புகள் (நகரபகுதி) குடியிருப்போர் நல சங்கங்களின் மூலமாக தொடர்புடைய பகுதியில் வாக்காளர் பட்டியல் படித்து பெயர்களை சரிபார்த்து கொள்ளுதல். | 07.10.2017, 21.10.2017 (சனிகிழமை) |
| 4. | சிறப்பு முகாம்கள் நடத்தி வாக்குச்சாவடிநிலை முகவர்ளுடன் கோரிக்கை / ஆட்சேபணை மனுக்கள் பெறுதல் | 08.10.2017 மற்றும் 22.10.2017 (ஞாயிற்று கிழமை) |
| 5. | கோரிக்கை மற்றும் ஆட்சேபணை மனுக்களை வாக்காளர் பதிவு அலுவலர் முடிவு செய்தல் | 10.12.2017 |
| 6. | இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | 05.01.2018 (வெள்ளிக்கிழமை) |

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட நாள்:03.10.2017 முதல் 31.10.2017 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நியமன வாக்குச்சாவடி அமைவிடங்களில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் மற்றும் உருவப்படம் மாறியிருத்தல்/தெளிவாக உருவப்படம் இல்லாமல் இருப்பது போன்றவைகளுக்கு விண்ணப்பங்கள் (Booth Level Officer) வாக்குசாவடி நிலை அலுவலர் மூலம் பெறப்படும். மேலும், சிறப்பு முகாம் நாட்கள் 08.10.2017 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 22.10.2017 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை (Designated Officer) வாக்குசாவடி நிர்ணய அலுவலர்கள் மூலம் பெறப்படும். சிறப்பு முகாம் பணிகளை கண்காணிக்க துணை ஆட்சியர் நிலையில் மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் (வாக்குச்சாவடி நிலை முகவர்கள்) மூலமாக பெறப்படும் கோரிக்கை மனுக்கள் நாள் ஒன்றுக்கு 10 மனுக்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இம்மாதிரி பெறப்படும் கோரிக்கை மனுக்களில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதியிடமிருந்து மேற்படி மனு அளிக்கும் முழுகாலத்தில் 30 மனுக்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

மேலும் தகுதியான வாக்காளர்கள் பல்வேறு கோரிக்கைகளுக்காக கீழ்காணும் படிவங்களில் மனுக்களை அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**படிவம் -6 : முதன்முறையாக பெயர் சேர்க்க (அதாவது பெயர் சேர்க்க விரும்புவர் பெயர் வேறு எங்கும் பதிவு பெறாமலிருந்தால்) அல்லது ஒரு சட்டமன்ற தொகுதியிலிருந்து மற்றொரு சட்டமன்ற தொகுதிக்கு வசிப்பிடம் மாறியிருந்தால்.**

**படிவம் -6A : வெளிநாட்டில் வசிக்கும் இந்திய குடிமக்கள் பெயர் சேர்க்க**

**படிவம் - 7 : பெயர்நீக்கம்**

**படிவம் - 8 : பெயர் , வயது , பாலினம், உறவுமுறை முதலிய பதிவுகளில் திருத்தம் அல்லது உருவபடம் மாறியிருத்தல்/தெளிவான உருவப்படம் இல்லாமல் இருத்தல்.**

**படிவம் -8A : ஒரு சட்டமன்ற தொகுதிக்குள்ளேயே வசிப்பிடம் மாறியிருந்தால்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளம் www.nvsp.in (National Voters Service Portal) ஆன்லைன் மூலமாகவும் வாக்காளர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பணிகள் குறித்து கீழ்காணும் அலுவலர்களை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.

| எண்/சட்டமன்ற தொகுதி | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | தொலைபேசி எண் |
|---|---|---|
| 70 செஞ்சி | வட்டாட்சியர், செஞ்சி | 9445000524<br>04145-222007 |
| | வட்டாட்சியர், மேல்மலையனூர் | 9442122621<br>04145-234209 |
| 71.மைலம் | வட்டாட்சியர், திண்டிவனம் | 9445000523<br>04147-222090 |
| 72.திண்டிவனம் (தனி) | | |
| | வட்டாட்சியர், மரக்காணம் | 9445461915<br>04147-239449 |
| 73.வானூர் (தனி) | வட்டாட்சியர், வானூர் | 9445000526<br>0413-2677391 |
| 74.விழுப்புரம் | வட்டாட்சியர், விழுப்புரம் | 9445000525<br>04146-222554 |
| 75.விக்கிரவாண்டி | வட்டாட்சியர், விக்கிரவாண்டி | 9445461837<br>04146-233132 |
| 76.திருக்கோவிலூர் | வட்டாட்சியர், திருக்கோவிலூர் | 9445000521<br>04153-252316 |
| 77.உளுந்தூர்பேட்டை | வட்டாட்சியர், உளுந்தூர்பேட்டை | 9445000522<br>04149-222255 |
| 78.ரிஷிவந்தியம் | வட்டாட்சியர், சங்கராபுரம் | 9445000520<br>04151-235329 |
| 79.சங்கராபுரம் | | |
| 80.கள்ளக்குறிச்சி (தனி) | வட்டாட்சியர், கள்ளக்குறிச்சி | 9445000519<br>04151-222449 |
| | வட்டாட்சியர், சின்னசேலம் | 9976696515<br>04151-257400 |
| நகராட்சி ஆணையர், விழுப்புரம் | | 9789167797<br>04146-222206 |
| நகராட்சி ஆணையர், திண்டிவனம் | | 9443291386<br>04147-222073, 222805 |

தனியார் மற்றும் அரசு கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ /மாணவியர்கள் அவர்கள் கல்வி பயிலும் கல்லூரிகளிலேயே வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு அதே கல்லூரிகளில் பயின்றுவரும் மாணவர்களில் கல்லூரி தூதுவராக (Campus Ambassadors) தேர்வு செய்யப்பட்டவர் மூலம் கோரிக்கை மனுக்களை உரிய படிவத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இணையதள வசதி உள்ள கல்லூரிகளில் ஆன்லைன் மூலமாகவும் விண்ணப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதியதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு 31.12.1999 அன்றோ அதற்கு முன்போ பிறந்தவராய் இருத்தல் வேண்டும். 01.01.2018ல் 18 வயது நிரம்பியவராக கருதி பெயர் சேர்க்க தகுதி உடையவராக கருத வேண்டும்.

வாக்காளர் தங்களுடைய பகுதியில் சாதரணமாக குடியிருப்புவாசியாக இருத்தல் வேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் திருத்தியமைக்கப்பட்ட படிவத்திலேயே வாக்காளர்கள் கோரிக்கை மனுக்களை அளித்தல் வேண்டும். பழைய படிவங்களில் கோரிக்கை மனுக்களை அளித்தல் கூடாது.

தகுதியானவர்களிடம் பெறப்படும் பல்வேறு கோரிக்கை மனுக்களில் முந்தைய முகவரி/வாக்காளர் புகைபட அடையாள அட்டை எண் விபரங்களை மனுவில் குறிப்பிடும்படியும் இதுபோன்று பெறும் மனுவில் கோரிக்கையாளரது கைபேசி எண்,

மின்னஞ்சல் முகவரி குறிப்பிட்டு மனுக்களை அளிக்க வேண்டும். விண்ணப்பிப்பவருக்கு கைபேசி எண் இல்லாத பட்சத்தில் அவரது குடும்ப உறுப்பினரது கைபேசி எண்ணை குறிப்பிட்டு வழங்க வேண்டும்.

படிவம் 6ல் பெயர் சேர்த்தலுக்கான படிவத்துடன் வயதிற்கான ஆதாரமாக பிறப்பு சான்று அல்லது கல்லூரி, பள்ளி மாற்றுச்சான்றிதழ், இருப்பிடத்திற்கு ஆதாரமாக குடும்ப அட்டை நகல் அல்லது இருப்பிடத்தை குறிக்கும் அஞ்சல் உள்ள ஓட்டுநர் உரிமம் வங்கி கணக்கு புத்தகம் நகல் ஆகியவைகளுடன் விண்ணப்பிக்கலாம்.

இப்பணி சீரிய முறையில் நடைபெறுவதற்கு கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களும் தகுந்த ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இக்கூட்டத்தில், அ.இ.அ.தி.மு.க. நகர செயலாளர் திரு.பாஸ்கரன், தி.மு.க. மாவட்ட பொருளாளர் திரு.புகழேந்தி, பா.ஜ.க. மாவட்ட செயலாளர் திரு.சுகுமார், காஸ்கிரஸ் நகர தலைவர் திரு.செல்வராஜ், தே.மு.தி.க. நகர செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்ட குழு உறுப்பினர், பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட தலைவர் திரு.கருஞ்சிறுத்தை கலியமூர்த்தி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.